# காக்கை வன்னியன் முதல் கதிர்காமர் வரை

## பகுதி II

### 7

ஆறுமுக நாவலருக்குப் பின் அவரது மாணாக்கர்களும் உறவினர்களும் சேர்ந்து 1888ல் சைவ பரிபாலன சபையை நிறுவினர். இச் சபை ஆறுமுகநாவலர் விரும்பியபடி சைவப் பாடசாலைகளை அமைத்து பிள்ளைகளுக்கு தமிழும் சைவமும் சொல்லிக்கொடுத்தது.

1890 ஆம் ஆண்டு இச் சபையின் பொறுப்பில் 6 பாடசாலைகள் இருந்தன. இவ்வற்றில் 661 மாணவர்கள் கல்வி கற்றனர். அதே ஆண்டு இறுதியில் ஆங்கிலேய -மற்றும் அமெரிக்கன் மிசனறி பாடசாலைகளுக்கு இணையாக யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி நிறுவப்பட்டது. இந்தக் கல்லூரியிலும், மற்றைய பாடசாலைகளிலும் சாதி குறைந்தவர்களின் பிள்ளைகள் கல்வி கற்க அனுமதிக்கப்படவில்லை.

1895 இல் சைவ பரிபாலன சபை குடாநாடு முழுவதும் 30 பாடசாலைகளை அமைத்திருந்தது. இவற்றில் 4500 மாணவர்கள் கல்வி கற்றனர். 1890-க்கும் 1895-க்கும் இடைப்பட்ட ஐந்தாண்டு காலத்தில் முன்னைய காலத்தைவிட தமிழ் மொழிக் கல்வி கணிசமான அளவு வளர்ச்சிகண்டிருந்தது. சைவசமயமும், போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் காலத்து வீழ்ச்சியிலிருந்து மறுபடி எழுந்திருந்தது. குடாநாடு முழுவதிலும் பல்வேறு சைவக் கோவில்களில் புனருத்தாரணம் செய்யப்பட்டது. கோவில்களில் ஆறு காலப்பூசை, திருவிழாக்கள் என்பன தவறாது நிகழ்வதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

யாழ்ப்பாண சமூக அமைப்பைப் பொறுத்தவரையிலும், அதுவும் போர்த்துக்கேயர், ஒல்லாந்தர்காலதளம்பல் நிலையிலிருந்து தன்னை தன்னுடைய உறுதி அமைப்பை பழையபடி கெட்டிப்படுத்திக் கொண்டது.

கிறிஸ்தவ முகாம், இந்து முகாம் என்ற இரண்டு முகாங்களிலிருந்தும் 'ஆங்கிலேயக் கனவான்கள்' கூட்டம் ஒன்று உருவாகியிருந்தது.

ஆங்கிலேயப் பாணியை, சகல விடயத்திலும் பிரதி செய்து கொள்வது, மாட்சிமை தங்கிய பிரித்தானிய மகாராணியின் ஆட்சி அதிகாரத்துக்குட்பட்ட பிரசைகள் என்று சொல்லிக் கொள்வதை கிடைத்தற்கரிய பெரும் பேறாக நினைப்பது இலண்டன் மாநகரத்தை தரிசிப்பதையும் ஒக்ஸ்போட் கேம்பிறிட்ஜ் பல்கலைக் கழகங்களில் கல்வி கற்பதையும் மாபெரும் இலட்சியக் கனவாக நினைப்பது, என்பன இந்த ஆங்கிலக் கனவான்கள் கூட்டத்தின் பொதுவான அம்சங்களாக இருந்தன.

இவர்களைப் பொறுத்தவரை தமிழ் மொழி தரமில்லாதது. தமிழருடைய பண்பாடு அசிங்கமானது. தமிழர்களுடைய பாரம்பரிய உடைகள். அசிங்கமானவை. தமிழில் பேசுவது, எழுதுவது கௌரவக்குறைச்சலானது. ஆனால் மனிதனுடைய பிறப்பைக் கொண்டும், குலத் தொழிலைக் கொண்டும் நிர்ணயிக்கப்பட்ட சாதி மட்டும் உயர்வாக இருந்தது. இந்தக் கனவான்கள் கூட்டம் தங்களுடைய நலனுக்காக எதை இழக்கத் தயாராக இருந்தாலும் சாதியை மட்டும் இழக்கத் தயாராக இருக்கவில்லை.

சாதியை அடிப்படையாகக் கொண்டிராத கிறிஸ்தவ மதத் தேவாலயங்களில் கூட இக் கால கட்டத்தில் சாதி பார்க்கப்பட்டது. தேவாலயத்தின் இருக்கைகளில் இன்ன சாதியினர், இன்ன பகுதியில் இன்ன இருக்கைகளில்தான் அமர வேண்டும் என்று கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டிருந்தன.

கிறிஸ்தவ மதக் கல்வி கற்ற எவரும் மதகுருவாக வரலாம் என்ற கிறிஸ்தவ முறைக்குப் புறம்பாக 'பிறப்பினாலேயே ஒருவன்-கோயில் குருக்களாக வரலாம்' என்ற சனாதன இந்து முறையே கிறிஸ்தவ குருபீடத்திலும் கடைப்பிடிக்கப்பட்டது.

கிறிஸ்தவ மிசனறி பாடசாலைகளில் கூட சாதி குறைந்தவர்களின் பிள்ளைகளுக்கு அனுமதி மறுக்கப்பட்டது.

## பாமரர்களுக்கு அறிவூட்டிய கிராமிய மரபுகள்

இந்து மேட்டுக் குடியினர்- கல்வி என்பது தங்களுக்கு மட்டுமே உரித்துடைய பிறப்புரிமை என்று நினைத்திருந்தனர். அவர்கள் தாங்கள் நிர்வகித்த எந்த பாடசாலைகளிலும் திண்ணைப்பள்ளிக்கூடங்களிலும் குறிப்பிட்ட சாதியினரின் பிள்ளைகளுக்கு மட்டுமே கல்வி கற்க அனுமதித்திருந்தனர்.

யாழ்ப்பாண சமூக அமைப்பின் இடைநிலை மற்றும் கீழ் நிலை சாதிகளைச் சேர்ந்த மக்கள் தொடர்ந்து கல்வியுரிமையற்றவர்களாக இருந்த போதும் கிராமியக் கலைகள் குறிப்பாக நாட்டுக் கூத்துக்கள் என்பவற்றை நிகழ்த்துவது, அதற்கான பயிற்சிகளை நடத்துவது என்ற வகையில் கிராமம் கிராமமாக தங்களுக்குள் சில மரபுகளை உருவாக்கி வைத்திருந்தனர். இந்த மரபுகள் வழியாக அவர்கள் தாய்மொழி அறிவை வளர்த்து வந்தனர். இந்தப் பிரிவைச் சேர்ந்த பெரும்பாலான மக்களுக்கு எழுத்தறிவு இல்லாவிட்டாலும் செவிவழி மூலமான தாய் மொழிக்கல்வி அறிவு ஓரளவுக்கு இருந்தது. தமிழ் மொழிமீதும், தமிழ் கலைகள் மீதும் பார்ப்பனிய மதப் படுத்தப்படாத தமிழரின் புராதன வழிபாட்டு முறைகள் மீதும் அவர்கள் மிகுந்த ஈடுபாடும் அக்கறையும் கொண்டிருந்தனர்.

பெரும்பாலான யாழ்ப்பாணத்து நிலப் பிரபுக்கள் 'ஆங்கிலேயக் கனவான்களாக மாறி விட்டதால்' அவர்களுக்கும், அவர்களது நிலத்தில் பண்ணையடிமைகளாக வேலை செய்த கீழ் நிலை சாதியினருக்குமான அடக்குமுறை வடிவமும் வேறு தன்மையைப் பெற ஆரம்பித்தது.



பெரும்பாலான நிலப்பிரபுக்களின் நிலங்களில் பண்ணையடிமைகளாக வேலை செய்த பஞ்சமர்கள் குத்தகைக்காரர்களாக மாறும் வாய்ப்புக்கள் உருவாகின. லண்டனுக்குச் சென்று கல்வி கற்றுத் திரும்பிய ஆங்கிலக் கல்விமான்களும், கிறிஸ்தவக்குருமார்கள் சிலரும் பஞ்சமர்களை தங்கள் வீடு, காணி, தோட்டம் என்பவற்றை பராமரிக்கும் வேலையாட்களாக சேர்த்துக் கொண்டனர். அதற்காக அவர்களுக்கு ஊதியம் வழங்கப்பட்டது.

கடல் சார்ந்த தொழிலைச் செய்து வந்த பரதவர்கள் முக்குவர்கள் தமிழரசர் காலத்திலிருந்தே கடற் தொழில் செய்து வந்தபோதும், பெரும்பாலும் சுயதேவை அடிப்படையிலேயே அவர்களது தொழில் இருந்தது. ஆனால் ஆங்கிலேயர் ஆட்சியில் கடல் வணிகம், மீன் மற்றும் கருவாடு என்பவற்றுக்கான தேவையும் அதற்கான சந்தை வாய்ப்புக்களும் உருவாகியது. இதனால் அந்த சமூகத்துக்குள்ளிருந்தே கடல் பிரபுத்துவபிரிவு ஒன்று உருவாகியது. இவ்வாறு அரசியர் பொருளாதார சூழ்நிலைகளில் ஏற்பட்ட மாற்றம் யாழ்ப்பாணத்து சாதி அமைப்பிலும், சில மாறுதல்களை ஏற்படுத்தியது. பஞ்சமர்கள் மற்றும் இடை நிலை சாதியமைப்பைச் சேர்ந்தவர்கள் தங்களுக்கு காலா காலமாக இழைக்கப்பட்டு வந்த அநீதிகளுக்கும்- அடக்கு முறைகளுக்கு எதிராகப் போராடவும் அதற்கெதிராக ஒன்று திரளவும் முற்பட்டனர்.

இதைத் தடுக்கும் முயற்சியாக கோயில்களைச் சார்ந்து இந்த மக்களால் ஆடப்பட்டு வந்த கிராமியக் கலைகள் ஆகம விதிகளின் பேரால் கோவில் பிரதேசங்களில் ஆடுவது தடைவிதிக்கப்பட்டது. கோயில் திருவிழாக்களில் அல்லது விசேட தினங்களையொட்டி கோவில் வெளி வீதிகளில் நிகழ்த்தப்பட்டு வந்த கூத்து வடிவங்களுக்கு அனுமதி வழங்கப்பட்ட போதும் அதை வைத்தே இந்த மக்களிடையே பிரிவினையையும் சண்டையையும் உண்டாக்கவும் முயற்சி எடுக்கப்பட்டன.

தொழில் ரீதியாக முரண்பாடுகளைக் கொண்டிருந்த இந்த மக்களிடையே- ஒரு பிரிவினர் ஒரு கூத்தை சிறப்பாக கோயில் திருவிழாவுக்கு ஆடிவிட்டால் - மறுபிரிவினருக்கும் என்ன அவர்கள் பெரிய கூத்து ஆடிவிட்டார்கள் நீங்கள் ஆடவில்லையா? என்று தூண்டிவிட அவர்கள் போட்டிக்கு கூத்து நடத்த பதிலுக்கு முதலாமவர்களும் மீண்டும் கூத்து நடத்த - பின்னர் அதுவே அடி, தடி, கத்தி வெட்டு, வாள்வெட்டு, சண்டையாக முடிந்து இரண்டு தரப்பாருமே தங்களுடைய வீடு, காணி, வயல் அனைத்தையும் விற்றோ அடகு வைத்தோ வழக்காடி எல்லாவற்றையும் இழந்து போய், கடன்காரர்களாய், ஏதுமற்றவர்களாய், மீண்டும் ஆரம்பத்திலிருந்தே வாழ்க்கையை ஆரம்பிக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டனர்.

கிழக்கு மாகாணம் மற்றும் வன்னிப் பிரதேசத்தைப் பொறுத்தவரை ஆங்கிலேயர் ஆட்சி சமூக ரீதியாக பெரிய மாற்றங்களை ஏற்படுத்தியதாகச் சொல்லமுடியாது. ஆங்கிலேயர் காலனிய நிர்வாகம், யாழ்ப்பாணத்தில் ஆங்கிலக் கல்விக்குக் கொடுத்த முக்கியத்துவத்தை வன்னிக்கும், கிழக்கு மாகாணத்துக்கும் கொடுக்கவில்லை. யாழ்ப்பாணக்குடா நாட்டைப் போல் அங்கு சாதிய முரண்பாடு பெரியளவுக்கு இல்லாதிருந்தது அதற்கொரு காரணமாகும்.

கிழக்கு மாகாணம் மற்றும் வன்னிக் கரையோரப் பிரதேசங்களில் கிறிஸ்தவ மதமாற்றம் ஏற்பட்ட போது ஏனைய இடங்களோடு ஒப்பிடும் போது அது விகிதாசாரத்தில் மிகக் குறைவாகவே இருந்தது.

சைவத்தையும், தமிழையும் வளர்க்க முற்பட்ட சைவ பரிபாலன இயக்கம் கிழக்கு மாகாணத்திலும்- வன்னியிலும் இருந்த சைவ சமயத்தவர்கள் மற்றும் தமிழர்களுடைய நலன்களில் பெரிய அக்கறை கொண்டிருக்கவில்லை.

யாழ்ப்பாணத்தில் ஆகம விதிகளின் பேரால் கோவில்களுக்கும் கிராமியக் கலைகளுக்கும் இருந்த தொடர்பு துண்டிக்கப்பட்டதுபோல் கிழக்கில் இடம் பெறாததால் அங்கு பாரம்பரிய தமிழ் கிராமியக் கலைகளும் கூத்து மரபுகளும் அழிந்து, சிதைந்து விடாமல் பாதுகாக்கும் முயற்சிகள் பெருமளவுக்கு நடந்தன.

**- நக்கீரன்**

padippakam
படிப்பகம்